நூல் கொள்முதல் முறைகேடு

பெரியார் அறிவுலகத்தில் ஊழல் தடுப்புத் துறை சோதனை

கோவை, நவ. 10: கோவை காந்திபுரத்தில் அமைந்துள்ள பெரியார் அறிவுலகம் நூலகத்துக்குப் புத்தகங்கள் கொள்முதல் செய்ததில் பல கோடி ரூபாய் முறைகேடு நிகழ்ந்ததாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, ஊழல் தடுப்புத் துறை போலீஸார் செவ்வாய்க்கிழமை அங்கு சோதனை மேற்கொண்டனர்.

கோவையில் அண்மையில் திறக்கப்பட்ட பெரியார் அறிவுலகம் நூலகத்துக்குப் புத்தகங்கள் வாங்கியதில் நிதி முறைகேடுகள் நடந்ததாக பரவலான குற்றச்சாட்டுகள் எழுந்தன. குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கற்பனையான போலி எழுத்தாளர்களின் பெயர்களில் தட்டச்சு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தரமற்ற நூல்கள் பல மடங்கு கூடுதல் விலைக்குக் கொள்முதல் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதில் 'அகல் விளக்கு' மற்றும் 'ஃபீனிக்ஸ்' ஆகிய பதிப்பகங்களின் நூல்கள் பெருமளவிலும், அதிக விலையிலும் வாங்கப்பட்டதாக கூறப்படும் விவகாரம் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இச்சூழலில் புத்தகக் கொள்முதல் ஊழல் தொடர்பாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் புகார் அளித்தார்.

இதன் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்த ஊழல் தடுப்புத் துறையினர், முதல்கட்டமாக சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் திங்கள்கிழமை சோதனை நடத்தினர்.

இந்த நிலையில், கோவை காந்திபுரத்தில் அமைந்துள்ள பெரியார் அறிவுலக நூலகத்தில் டிஎஸ்பி இமானுவேல் ராஜசேகரன், ஏடிஎஸ்பி ராஜேஷ் உள்ளிட்ட ஊழல் தடுப்புத் துறை போலீஸார் செவ்வாய்க்கிழமை சோதனை மேற்கொண்டனர். நூலகத்தின் 3-ஆவது தளத்தில் 3 பேர் கொண்ட ஊழல் தடுப்பு போலீஸ் சிறப்புக் குழுவினர் தீவிர ஆய்வில் ஈடுபட்டனர்.



கோவை பெரியார் அறிவுலக 3-ஆவது தளத்தில் வெளிநபர்கள் யாரும் வராத வகையில் உள்ளுறமாக பூட்டிய ஊழல் தடுப்புத் துறையினர்.

நூலகத்தின் தலைமை நிர்வாக அலுவலகம் மற்றும் புத்தகப் பிரிவுகளில் சோதனை செய்த அதிகாரிகள், புத்தகக் கொள்முதல் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சோதனையிட்டனர். குறிப்பாக, நூலகப் பதிவேடுகள், புத்தக கொள்முதல் ரசீதுகள் மற்றும் விலைப்பட்டியல்கள், பதிப்பகங்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்ட நிதி மற்றும் காசோலை விவரங்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை அதிகாரிகள் தீவிர சரிபார்ப்புக்கு உள்படுத்தினர்.

மேலும், சர்ச்சைக்குரிய பதிப்பகங்களிடம் இருந்து பெறப்பட்ட மொத்த நூல்களின் எண்ணிக்கை, அவற்றுக்கு அரசுத் தரப்பில் வழங்கப்பட்ட முழுத் தொகை மற்றும் இந்த நூல்களைப் பரிந்துரைத்த தேர்வுக்குழு உறுப்பினர்கள், அதிகாரிகள் யார் என்பது குறித்தும் நூலக ஊழியர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது. பிற்பகல் 3 மணியளவில் போலீஸாரின் சோதனை நிறைவடைந்தது.

சோதனையின்போது ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. அடுத்தகட்டமாக முறைகேட்டில் தொடர்புடைய நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரௌடிகளுக்கு எதிரான நடவடிக்கை: தமிழகத்தில் இரு நாள்களில் 955 பேர் கைது

சென்னை, நவ. 10: தமிழகத்தில் கடந்த இரு நாள்கள் ரௌடிகள், சமூக விரோதிகளுக்கு எதிராக காவல் துறை எடுக்கப்பட்ட நடவடிக்கையில் 955 பேர் கைது செய்யப்பட்டனர்.

தீபாவளி பண்டிகை தினமான ஞாயிற்றுக்கிழமை (நவ.8) தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட மோதல், ரௌடிகள் முன் விரோதம், மதுபோதை தகராறு போன்றவற்றால் 15 பேர் கொலை செய்யப்பட்டதாக அரசியல் கட்சிகள் புகார் தெரிவித்தன. ஆனால், ஞாயிற்றுக்கிழமை அன்று 8 கொலை சம்பவங்களே நிகழ்ந்தன. அதில் பெரும்பாலானவை சொந்த பகையின் காரணமாக நிகழ்ந்தவை என்று தமிழக காவல் துறை செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தமிழக காவல் துறையின் தலைமை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால், ரௌடிகள், சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள், குற்றப் பின்னணி கொண்டவர்கள் ஆகியோரை தீவிர கண்காணிப்பில் வைக்கும்படியும், பிடியாணை பெற்று தலைமறைவாக இருப்பவர்களை கைது செய்யும்படியும், வழக்குகளில் கைது செய்யப்படாமல் தலைமறைவாக இருப்பவர்களையும் கைது செய்யும்படியும் உத்தரவிட்டார்.

443 ரௌடிகள் கைது: அதன்பேரில், தமிழகம் முழுவதும் போலீஸார் உஷார் படுத்தப்பட்டு, தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் ஒருபகுதியாக மாநிலம் முழுவதும் கடந்த இரு நாள்களில் 88,570 ரௌடிகள், சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள், குற்றப் பின்னணி கொண்டவர்கள் விசாரணைக்கு உள்படுத்தப்பட்டு, கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டனர்.

இதில் 8,626 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் சோதனைக்கு உள்படுத்தப்பட்டனர். அவர்களில் 443 பேர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாக இருந்த 73 பேர் கைது செய்யப்பட்டனர். இதேபோல வழக்குகளில் தலைமறைவாக இருப்பவர்களையும், நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர்களையும் கைது செய்வதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போதைப் பொருள் வழக்குகள்: தமிழகம் முழுவதும் போதைப் பொருள் வழக்குகளில் தொடர்புடைய 1,624 பேர் கண்காணிக்கப்பட்டு, சோதனைக்கு உள்படுத்தப்பட்டனர். இதில் சட்டவிரோதமாக போதைப் பொருள் விற்றதாக 77 பேர் கைது செய்யப்பட்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக அவர்களில் 167 பேர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். இதேபோல பொதுஇடங்களில் மது அருந்தியதாக 1,859 வழக்குகள் பதியப்பட்டு, 195 பேர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேலும், மாநிலம் முழுவதும் மதுபோதையில் வாகனம் ஓட்டியதாக 2,865 வழக்குகளும், அதி வேகமாகவும் ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டியதாக 1,243 வழக்குகளும் பதியப்பட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

சென்னையில் 36 ரௌடிகள்: சென்னையில் ரௌடிகளுக்கு எதிரான நடவடிக்கையின் விளைவாக, 185 ரௌடிகள் உள்பட 222 பேரைப் பிடித்து போலீஸார் விசாரணை செய்து, 16 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் உள்பட 36 பேரைக் கைது செய்து, சிறைக்கு அனுப்பினர்.

மீதமுள்ள 169 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் உள்பட 186 பேரின் தற்போதைய குற்றச் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

ஆட்சியருக்கு குறுஞ்செய்தி விவகாரம்: தவெக எம்எல்ஏ அருள் விக்னேஷ் விளக்கம்

கள்ளக்குறிச்சி, நவ. 10: 'மாவட்ட ஆட்சியருக்கு தான் ஆபாச குறுஞ்செய்தி ஏதும் அனுப்பவில்லை' என கள்ளக்குறிச்சி தொகுதி தவெக எம்எல்ஏ சி.அருள் விக்னேஷ் விளக்கமளித்துள்ளார். இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என திமுக தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி புதிய பேருந்து நிலையத்தில் தொகுதி எம்எல்ஏ சி.அருள் விக்னேஷ் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: கள்ளக்குறிச்சி மாவட்டத்திலேயே தவெக சார்பில் வெற்றி பெற்ற எம்எல்ஏ நான் ஒருவன் மட்டும்தான். இதனால் என் மீது வன்மம் அதிகமாக உள்ளது. இதனால் சமூக வலைதளங்களில் இப்படித் தவறாகப் பதிவிட்டு வருகிறார்கள். அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை. நான் தவறாக குறுஞ்செய்தி அனுப்பியது உண்மை என்றால், என் மீது எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுக்கட்டும் என்றார் எம்எல்ஏ அருள் விக்னேஷ்.

சிபிஐ விசாரணைக்கு திமுக வலியுறுத்தல்: ஆபாச குறுஞ்செய்தி விவகாரம் தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டி கள்ளக்குறிச்சி திமுக எம்.பி. தே.மலையரசன், உளுந்தூர்பேட்டை எம்எல்ஏ ஜி.ஆர்.வசந்தவேல், ரிஷிவந்தியம் எம்எல்ஏ க.கார்த்திகேயன் ஆகியோர் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.ஷாநாஸை, அவரது அலுவலகத்தில் சந்தித்து புகார் மனு அளித்தனர்.

பின்னர், அவர்கள் செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்து, புகார் உண்மை என்றால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

'தீவிர சிகிச்சைப் பிரிவில்' தமிழக சட்டம்-ஒழுங்கு: மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ. 10: தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு நிலைமை தீவிர சிகிச்சைப் பிரிவில் (ஐசியு) உள்ளது என்றும் ஆட்சி நிர்வாகம் முடக்கம் (கோமா) நிலையில் உள்ளது என்றும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை ஐசியுவில் உள்ளது. ஆட்சி நிர்வாகம் கோமாவில் உள்ளது. ஒரே நாளில் 17 கொலைகள் நடந்துள்ளன. சட்டப் பேரவைத் துணைத் தலைவர் பதவியின் மாண்பு குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சியில், குற்றவாளிகளுக்குப் பயமில்லை. காவல் துறையினருக்குப் பாதுகாப்பில்லை. தவெகவைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குக் கட்டுப்பாடில்லை. மொத்தத்தில், முதல்வர் விஜய்க்கு பொறுப்பே இல்லை' எனத் தெரிவித்துள்ளார் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்,
நாகப்பட்டினம் - 611 002
விளம்பர எண். 03 / 2026

இப்பல்கலைக்கழகத்தில் காலியாக உள்ள கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

பண்ணை மேலாளர் – 2 பணியிடங்கள்

விண்ணப்பதாரர்களுக்கான விண்ணப்படிவம், குறிப்புகள், ஊதியம், மற்றும் தகுதி முதலிய விவரங்கள் TNJFU இணையதளம் (www.tnjfu.ac.in) வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி நாள் 09.12.2026
குறிப்பு : பின்னர் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் TNJFU இணையதளம் வாயிலாக மட்டு மே தெரிவிக்கப்படும்.
இடம் : நாகப்பட்டினம்
நாள் : 10.11.2026 செதொஇ/960/வரைகலை/2026 பதிவாளர்

TAMIL NADU STATE AGRICULTURAL MARKETING BOARD
E-Tender Notice
Tender Notice No.T.12 / Sr.DO / F.1157 / 2026 / Dated.10.11.2026
Lumpsum Contract

For and on behalf of the Governor of Tamil Nadu, the Executive Engineer, Tamil Nadu State Agricultural Marketing Board, Guindy, Chennai-32, invites ONLINE tenders for the under mentioned works from the PWD/WRD registered contractors of appropriate class.

Sl NO	Name of Work	Value put to tender (Rs. In Lakhs) Approx.	EMD Rs. (Including GST)
1	Construction of Integrated Agricultural Extension Centre (IAEC) at Katpadi in Vellore District	235.34	2,78,000/-
2	Construction of Integrated Agricultural Extension Centre (IAEC) at Gudiyatham in Vellore District	259.49	3,07,000/-
3	Establishment of 100 MT cold storage at Keeramangalam Block in Pudukottai District	103.50	1,23,000/-

Important dates: 1. Last date and time of receipt of tender through online : 30.11.2026 upto 5:45 PM
2. Downloading the tender document by free of cost : 16.11.2026 to 30.11.2026 upto 5.45 PM
3. Date and time of opening e-Tender : 01.12.2026 from 12.15 PM onwards
4. For further details please visit website https://tntenders.gov.in
5. Period of Completion - S.No. 1 & 2-12 Months, Sl. No. 3-8 Months.

Note: i) It is the responsibility of the tenderer to check any corrigendum issued for any correction or modification uploaded subsequently in website, the same shall be taken into account while submitting tender.
ii) The Tender Authority does not take any responsibility for the delay / non-submission of tender/non-reconciliation of online payment caused due to non- availability of internet connection, network traffic / holidays or any other reasons.
iii) Tender may be cancelled at any stage by competent authority.
iv) Cost of EMD will be paid through online mode i.e. internet payment gateway (Credit/Debit), Net banking, NEFT/RTGS.

DIPR / 3476 / Tender / 2026 Executive Engineer, TNSAMB, Chennai - 32.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க&ப) வட்ட அலுவலகம், சிவகங்கை

ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம் / இனவிலைமுறை
(முன் தகுதி விண்ணப்பம்) இரு உறை முறை (வரிசை எண்1)

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 07 க.பொ/ கட்டடம் (க&ப) வட்டம்/சிவ /2026-2027/நாள் : 10.11.2026

தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்ட (க&ப) வட்டம், சிவகங்கை அவர்களால் ஒரு பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ. எண்	வேலையின் பெயர்	வேலையின் தோராய மதிப்பு இலட்சத்தில்	முன்வைப்புத் தொகை	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கிடைக்கும் நாள்	ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள்	பணி காலம் (பருவ காலம் உட்பட)
1	சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாஸ்டர் பிளான் வளாகத்தில் கூடுதல் ஆட்சியர் அலுவலக கட்டிடம் கட்டும் பணி.	ரூ.4087.50	ரூ.20,54,000	16.11.2026, பிற்பகல் 03.00 மணி முதல் 17.12.2026, பிற்பகல் 12.30 மணி வரை	17.12.2026, பிற்பகல் 01.30 மணி முதல்	540 நாட்கள்

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விவரம் அரசு இணையதளமான https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் திருத்தங்கள் / மாறுதல்கள் எதேனும் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 3494 /ஒப்பந்தப்புள்ளி/2026 கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட கட்டுனர் (ம) பராமரிப்பு வட்டம், வேலூர்-1.
ஒப்பந்த முறை : மொத்தத் தொகை

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்/8 / VLR-CLE / 2026 - 2027 / Dated.10.11.2026.

தமிழ்நாடு அரசுப்பணிக்காகவும் அனைத்து சார்பாகவும் வேலூர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுனர் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிக்கு 30.11.2026 அன்று இரவு 11 மணிக்கு கொண்டு அதுவரை நேரப்பு பிற்பகல் 3.00 மணிவரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன, https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 13.11.2026 முதல் 30.11.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம். மெற்படும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 30.11.2026 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

வ. எண்	பணியின் பெயர்	பணியின் தோராய மதிப்பு தொகை (ரூ. இலட்சங்களில்)	முன் வைப்புத் தொகை (ரூபாயில்)	பணி முடிக்க வேண்டிய காலம் [பருவ காலங்கள் உட்பட]
1	வேலூர் மாவட்டம், வேலூர் அரசினர் பெண்கள் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சிறப்பு தன்மை வாய்ந்த பல்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் பொதுமக்கள் காத்திருப்பு கூடம் கட்டும் பணி	97.92	ரூ.59,000/-	5 மாதங்கள்

ஒப்பந்தக்காரர் தகுதி : அரசாணை (நிலை) எண்.37 / பொதுப்பணி (ஜி2) துறை / நாள்.17.06.2022-ன்படி வகுப்பு IV-ல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மற்றும் அரசாணை நிலை) எண்.40 / பொதுப்பணி (ஜி2) துறை / நாள்.16.10.2026-ன்படி பொதுப்பணித்துறையில் வகுப்பு IV-ல் பதிவுமேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தகுதியானவர்கள்.

முன் வைப்புத் தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/3478/ஒப்பந்தப்புள்ளி/2026 கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்ட [கட்டுனர் மற்றும் பராமரிப்பு] வட்டம், வேலூர்-1

Department of Consumer Affairs

Bureau of Indian Standards
National Standards Body of India

பிராண்டு சரிபார்ப்பு ✓ அம்சங்கள் சரிபார்ப்பு ✓ பாதுகாப்பு ??? ✓



நீங்கள் கண்டிப்பாக சரிபார்க்க வேண்டியது
BIS முத்திரை

BIS தர முத்திரையை எவ்வாறு சரிபார்ப்பது?

BIS CARE செயலியைப் பதிவிறக்கம் செய்ய ஒளிவருடுக



R-எண்ணைச் சரிபார்க்கவும் என்பதைக் கிளிக் செய்யவும்



பதிவு எண்ணை உள்ளிடவும்

'புகார்கள்' அம்சத்தைப் பயன்படுத்தி, தயாரிப்பின் பாதுகாப்பு அல்லது BISமுத்திரைகளின் தவறான பயன்பாடு தொடர்பான புகார்களைப் பதிவு செய்யவும்.

Follow us on: @Indianstandards

CBC 08103/13/0008/2627

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda India's International Bank | 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா
தூத்துக்குடி கிளை : எண்.159A, விக்டோரியா வீதி, தூத்துக்குடி – 628 001.
போன் எண். 0461-2321224, மொபைல் : 96866 01844, மின்னஞ்சல் : tutico@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ஒருக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)-ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் பின்-ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தார(ர்கள்) / அடமானதார(ர்கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தார்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதார்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதார் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	கவாதின நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. M/s.GTM டிரேடர்ஸ் (கடன்தார்), பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திருமதி.M.கமதி (அடமானதார்), க/பெதிரு.மணிகண்டபாக்கியராஜ், எண்.2B, பெரோரா சந்து, தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம். திரு.மணிகண்டபாக்கியராஜ் (உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதார்), த/பெதிரு.கணேசன், எண்.6/360, பொன்சுப்பையா நகர் 2வது வீதி, ஆரோக்கியபுரம், தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம்.	சொத்து எண்.1 : (கணேஷ் மகன் திரு.மணிகண்டபாக்கியராஜ் பெயரிலுள்ளது) : தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார் பதிவு அலுவலக அதிகார வரம்பு, தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி கிராமம், சர்வே எண்.107, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடத்தின், 8 எக்கர் 20 சென்ட், உட்பிரிவின்படி சர்வே எண்.107/1A1 ல் 3 எக்கர் 52 சென்ட், இதில் வடபுற பகுதி 99 சென்டில் தென்புற பகுதி 50 சென்ட் மேலும் சர்வே எண்.108 ல் உள்ள 17 எக்கர் 48 சென்ட், தற்போதைய உட்பிரிவு சர்வே எண்.108/1A1A1 ல் 7 எக்கர் 56 சென்ட், இதில் வடபுற பகுதி 37 சென்ட், மொத்தம் 87 சென்ட் நிலம் வீட்டு மனை பிளாட்டுகளாகப் பிரிக்கப்பட்டதில், தூத்துக்குடி பஞ்சாயத்து யூனியனின் லேஅவுட் எண்.A3/1786/82 ன்படி மனை எண்.13 ன் மேற்புற பகுதி 2.50 சென்ட், அதனோடான வீடு- கதவு எண்.6/360, லட்சுமிபுரம், சொத்தின் எல்லைகள் விபரம் : எல்லைகள் : வடக்கு – 16.50 அடி அகல கிழமேல் பொது ரோடு, மேற்கு – மனை எண்.12 ல் உள்ள வீட்டின் பொதுச் சுவர், தெற்கு – லீலாவதியம்மாளுக்குச் சொந்தமான சொத்து, கிழக்கு – மனை எண்.13 ன் கிழபுற பகுதியிலுள்ள வீட்டுப் பொதுச் சுவர். வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் : NIL அட்சரேகை : 8.822194, தீர்க்கரேகை : 78.151833 சொத்து எண்.2 : (திரு.மணிகண்டபாக்கியராஜ் மனைவி திருமதி.M.கமதி பெயரிலுள்ளது) : தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார் பதிவு அலுவலக அதிகார வரம்பு, ஒட்டப்பிடாரம் தாலுகா, மேல அரசரடி கிராமம், புஞ்சை சர்வே எண்.130/2, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டிடத்தின், 0.47.00 ஹெக்டேர் சமமான 1 எக்கர் 16 சென்டில் கிழபுற பகுதி 0.22.26 ஹெக்டேர் சமமான 55 சென்ட் அமைந்த எல்லைகள் விபரம் : எல்லைகள் : வடக்கு – கப்பையா, P.D.சிதம்பரம் பிள்ளை ஆகியோருக்குச் சொந்தமான சர்வே என்.130/3B, 130/3A1A1 ல் உள்ள நிலம், தெற்கு – சர்வே என்.129 ல் உள்ள வழித்தடம், கிழக்கு – குப்பா ரெட்டியாருக்குச் சொந்தமான சர்வே என்.128/3A2 நிலம் மற்றும் சர்வே என்.130/7B ல் உள்ள நிலம், மேற்கு – C.N.வெற்றிவேலுக்குச் சொந்தமான சர்வே என்.130/2 ல் உள்ள நடுப்பகுதி 40 சென்ட். வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் : NIL அட்சரேகை : 8.877056, தீர்க்கரேகை : 78.121583 சொத்து எண்.3 : (திரு.மணிகண்டபாக்கியராஜ் மனைவி திருமதி.M.கமதி பெயரிலுள்ளது) : தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார் பதிவு அலுவலக அதிகார வரம்பு, தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி கிராமம், சர்வே எண்.108/1A1A1A1A6 பகுதி, இதிலுள்ள 7 எக்கர் 56 சென்டின் கிழபுற கோடி, வடபுறப் பகுதி 1 எக்கர் 22 சென்ட், இதில் வடபுற பாதிப் பகுதி அதில் மேற்புறப் பகுதி 30.5 சென்ட்டில், கிழபுறப் பகுதி 9.04 சென்ட், இதில் நடுப்பகுதி 7.04 சென்ட் நிலம், அதனோடான வீடுகளுடன் (கதவு எண்.6/360/6, 6/360/6A, 6/360/6B, 6/360/6C, 6/360/6D, 6/360/6E) கூடிய சொத்தின் எல்லைகள் விபரம் : வடக்கு – பூவனைந்த நாடார், உலகு வாத்தியார், சூடாமணி ஆகியோருக்குச் சொந்தமான சொத்து, தெற்கு – 17 அடி அகல கிழமேல் பொது வழித்தடம், கிழக்கு – 'பவர்' அதிகாரம் மூலமாக ராமசாமிக்கு வழங்கிய சொத்து, மேற்கு – பட்டுக்கனிவைத்துள்ள சொத்து. அளவுகள் : (மேற்புற பகுதி) கிழமேல் இருபுறமும் 31 அடி, தென்வடல் இருபுறமும் 70½ அடி, மொத்தம் 2185.5 சதுரடி. அளவுகள் : (கிழபுற பகுதி) கிழமேல் வடபுறம் 13½ அடி, தென்புறம் 17 அடி, தென்வடல் மேற்புறம் 57½ அடி, கிழபுறம் 58½ அடி. மொத்தம் 884.5 சதுரடி, ஆக மொத்தம் 3070 சதுரடி சமமான 7.04 சென்ட் உட்பிரிவின்படி சொத்தானது சர்வே எண்.108/1A1A1A1A6A ல் பட்டா எண்.580 ன் கீழ் உள்ளது. வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் : NIL அட்சரேகை : 8.822630, தீர்க்கரேகை : 78.152533	மொத்த நிலுவை 10.11.2026 தேதியன்று, 1. கேஷ் கிரெடிட் – ரூ.3,52,75,021.23 (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து இரண்டு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து இருபத்து ஒன்று மற்றும் பைசா இருபத்து மூன்று மட்டும்) 10.11.2026 தேதியன்று தொகையை திரும்ப செலுத்தும் நாள் வரையான ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் 2. டெர்ம் லோன் – ரூ.10,95,588.33 (ரூபாய் பத்து லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து ஐநூற்று எண்பத்து எட்டு மற்றும் பைசா மூப்பத்து மூன்று மட்டும்) 10.11.2026 தேதியன்று தொகையை திரும்ப செலுத்தும் நாள் வரையான ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் ஆகமொத்தம் : ரூ. 3,63,70,609.56 (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து மூன்று லட்சத்து எழுபதாயிரத்து அறுநூற்று ஒன்பது மற்றும் பைசா ஐம்பத்து ஆறு மட்டும்) 10.11.2026 தேதியன்று தொகையை திரும்ப செலுத்தும் நாள் வரையான ஒப்பந்தப்படியான பின்வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன்	05.12.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	சொத்து எண்.1 : நிலம் மற்றும் கட்டிடம் : 1. ரூ.42,30,000/- (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 2. ரூ.4,23,000/- (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்) 3.